## வேர்ட்ஸ்மித் சிகரம்

# SECONDARY 2 - HIGHER TAMIL WORKSHEETS (PAPER 2)
# உயர்நிலை 2 - உயர்தமிழ் தேர்வுப் பயிற்சித்தாள் (தாள் 2)

## பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1 | தேர்வுத்தாள் 1 | 1 - 9 |
| 2 | தேர்வுத்தாள் 2 | 10 - 18 |
| 3 | தேர்வுத்தாள் 3 | 19 - 26 |
| 4 | தேர்வுத்தாள் 4 | 27 - 35 |
| 5 | தேர்வுத்தாள் 5 | 36 - 44 |
| 6 | தேர்வுத்தாள் 6 | 45 - 53 |
| 7 | தேர்வுத்தாள் 7 | 54 - 61 |
| 8 | தேர்வுத்தாள் 8 | 62 - 70 |
| 9 | தேர்வுத்தாள் 9 | 71 - 79 |
| 10 | தேர்வுத்தாள் 10 | 80 - 88 |
| 11 | தேர்வுத்தாள் 11 | 89 - 97 |
| 12 | தேர்வுத்தாள் 12 | 98 - 106 |
| 13 | அருஞ்சொற்கள் (தேர்வுத்தாள் 1 to 12) | 107 - 116 |
| 14 | விடைத்தாள் | 117 - 135 |

# தேர்வுத்தாள் 1

/60

'அ' பிரிவு

**A1 முன்னுணர்வுக் கருத்தறிதல் (10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் பகுதியில் கோடிட்ட இடங்களை மிகப் பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்பவும்.**

இந்தியா வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நாடுகளுள் ஒன்று. இங்கிருக்கும் கோயில்கள், **தேவாலயங்கள்** Q1. ________________________ **நூற்றாண்டு**களின் வரலாற்றினைக் கொண்டவை. அக்காலத்தில் வாழ்ந்த சேர, சோழ, பாண்டிய மன்னர்கள், நாயக்க மன்னர்கள் மற்றும் பல்லவ மன்னர்கள் ஆகியோரின் Q2. ___________________________ அமைந்த கோயில்களும் தேவாலயங்களும் வித்தியாசமான கட்டமைப்பில் அமைந்திருக்கின்றன. இவையனைத்தும் கலையம்சத்திலும், வடிவத்திலும் காண்போரைக் **கிறங்க** வைக்கின்றன. இக்கலைக் கட்டடங்கள் Q3. _________________________ பின்னால் வரலாற்றுச் சம்பவங்கள் மறைந்திருக்கின்றன.

இந்தியாவின் கட்டடக் கலையைக் காண்பதற்கு ஆயிரக்கணக்கான மக்கள் வெவ்வேறு **தேசங்களில்** இருந்து ஆண்டுதோறும் Q4. ________________________ வருகை புரிகிறார்கள். பள்ளி மாணவர்களும் இங்குக் கல்விச் சுற்றுலாவிற்கு அடிக்கடி வருகிறார்கள். Q5. _________________________ படித்த கலைக்கோயில்களையும் தேவாலயங்களையும் நேரில் காணும்போது இவர்கள் **மலைக்க**த் தவறுவதில்லை!

| | | |
|---|---|---|
| 1. திரளாக | 6. கைவண்ணத்தில் | 11. ஒட்டுமொத்தம் |
| 2. ஆகியவை | 7. அனைத்தையும் | 12. எண்ணத்தில் |
| 3. எல்லாரையும் | 8. முதலிய | 13. ஒவ்வொன்றுக்கும் |
| 4. படைப்பிற்காக | 9. போன்ற | 14. ஏட்டில் |
| 5. உருவாக்கத்துடன் | 10. கூட்டத்தில் | 15. அனுபவத்தில் |

## A2 பிழை திருத்தம் (10 மதிப்பெண்கள்)

**கீழ்க்காணும் பகுதியின் இடப்பக்கத்தில் ஐந்து வினாக்களின் எண்கள் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் எதிரிலுள்ள வரியில் கோடிடப்பட்டுள்ள ஒரு பிழையான சொல் உள்ளது. அந்த ஐந்து வரிகளிலும் உள்ள பிழையான சொற்களைத் திருத்தி, அச்சொற்களின் சரியான வடிவத்தை எழுதவும்.**

| | |
|---|---|
| | நமது இந்தியப் பாரம்பரியத்தில் வெகுகாலமாக இருந்து வரும் ஓர் இலை |
| | வெற்றிலை. இதனை பாக்கு, சுண்ணாம்பு ஆகியவற்றுடன் சுருட்டி |
| Q6 | வயதானவர்கள் வாயில் போட்டு மெள்ளுவதை நாம் பார்த்திருப்போம். |
| | ஆனால், இந்த வெற்றிலையில் **அபாரமான** மருத்துவக் குணங்கள் |
| Q7 | இருக்கின்றன என்பதை நாம் அறிந்திருப்போமா? வெற்றிலையின் கால்சியம், |
| | இரும்புச் சத்து அதிகம் உண்டு. இதனைக் கொதிக்க வைத்து, தேங்காய் |
| | எண்ணெயுடன் சேர்த்து புண், **சிரங்கு**கள் மீது தேய்த்து வந்தால் |
| Q8 | நாளடைவில் அவை குணமடைந்துவிடும். வயிற்றுக் கோலாறுகள் |
| | உள்ளவர்களும் தீராத தலைவலியால் அவதிப்படுபவர்களும் வெற்றிலையை |
| Q9 | வேறு சில பாரம்பரியப் பொருள்களுடன் சேர்த்து மருந்தான |
| | உட்கொள்ளலாம். தேள்கடி பட்டவர்களுக்கும் வெற்றிலை அருமருந்தாகப் |
| Q10 | பயன்படுத்தப்பட்டது. நீரிழிவு நோயால் அல்லலுறுபவர்களும் இந்த |
| | வெற்றிலையை வேப்பிலை, அருகம்புல் ஆகியவற்றுடன் சேர்த்து, கொதிக்க |
| | வைத்து அந்த நீரைப் பருகினால் நீரிழிவு நோய் குறையும் என்று |
| | கூறப்படுகிறது. |

Q6 __________________________

Q7 __________________________

Q8 __________________________

Q9 __________________________

Q10 __________________________

**'ஆ' பிரிவு**

**B3 கருத்தறிதல் 1 (20 மதிப்பெண்கள்)**

**பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியில் காணும் வினாக்களுக்கு உனது சொந்த நடையில் விடை எழுதவும்.**

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை

என்று கல்வியின் சிறப்பினைத் திருவள்ளுவர் இயம்புகிறார். கல்வியே எல்லாச் செல்வங்களிலும் **<u>தலையாயது</u>**. கல்விச்செல்வம் ஒருவரிடம் குடிகொண்டிருப்பது அவருக்கு மற்ற எல்லாச் செல்வங்களும் இருப்பதற்கு **<u>நிகராகும்</u>**. கல்வியைக் கற்பது அத்தியாவசியம் என்றால், அது நமக்குக் கற்பித்தவற்றைப் ***பிழையற*** மேற்கொள்வது அதைக் காட்டிலும் இன்றியமையாதது. நாம் அனைவரும் நம் கல்விப்பயணத்தைச் சிறுவயதில் தொடங்குகிறோம். கணிதம், அறிவியல், **<u>புவியியல்</u>** எனப் பாடங்களோடு விழுமியங்களையும் படிக்கிறோம். படித்த பாடங்கள் பணம் சம்பாதிக்கப் பயன்படுகிறது என்றால், கற்றுக்கொண்ட பண்புகள் நாம் வாழ்க்கையில் நல்ல மனிதர்களாக உருவெடுக்கத் துணைபுரிகின்றது.

பண்புகள் என்பவை கல்வியோடு **<u>இயைந்தவை</u>**. அவற்றைப் பிரித்துப் பார்ப்பது அரிது. கல்வி கற்ற ஒருவன் நற்பண்புகள் இல்லாதவனாக இருந்தால் அவன் ***கல்லாதவனாகவே*** கருதப்படுகிறான். நேர்முகத் தேர்வில், தான் படித்தவன் என்ற **<u>அகந்தை</u>**யைக் காட்டும் ஒருவனுக்கு யாரும் வேலை வழங்குவதில்லை. படிப்பில் சிறந்தவனாக இல்லாதிருப்பினும் பணிவன்புடன் நடந்து கொள்பவனையே எல்லாரும் விரும்புவார்கள். 'கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு' என்கிறது பழமொழி. படிப்பிற்கு **<u>எல்லை</u>**யேது? எனவே, ஒருவன் தனக்கு எல்லாம் தெரியும் என்று 'படித்த திமிருடன்' நடந்துகொள்வது முட்டாள்தனம்.

படிப்பில் நல்ல தேர்ச்சி பெற்றிருந்தும், மக்கள் பண்புகளில் குறையாது, மற்றவர்களையும் மதிப்பவர்களே 'உண்மையாகப் படித்தவர்கள்' எனக் கருதப்படுகிறார்கள். இவர்கள் தங்களுக்குத் தெரிந்ததையெல்லாம் கொட்டித் தீர்க்க மாட்டார்கள். மாறாக, தங்களைவிடப் படிப்பில் குறைந்த தேர்ச்சி பெற்றிருப்பவர்களின் ஆலோசனைகளுக்கும் செவி சாய்ப்பார்கள். உயர்வு தாழ்வு பாராமல் எல்லாரிடமும் **<u>இயல்பாக</u>**ப் பழகுவார்கள். அவர்களின் நிலையில் தங்களை நிறுத்திச் சிந்தித்துப் பார்ப்பார்கள். நிறைகுடத்தில் உள்ள நீர் எவ்வாறு தளும்பாதோ அதுபோன்று இவர்களின் அறிவாற்றல் ஒருபோதும் தற்பெருமையாக மாறாது.

கல்வி ஒருபோதும் நமக்குத் தீயனவற்றைக் கற்பிப்பதில்லை. நல்லொழுக்கத்தை மட்டுமே போதிக்கிறது. பிள்ளைகள் படிக்கும் காலத்திலேயே அவர்களுக்கு அறநெறிக்கல்வி கற்றுக் கொடுக்கப்படுகின்றது. அறநெறிக்கல்வி தேர்வில் சோதிக்கப்படாவிட்டாலும் அதற்கு முக்கியத்துவம் கொடுத்து மாணவர்களுக்கு ஆசிரியர்கள் கற்றுக்கொடுக்க வேண்டியது இன்றியமையாமை. மற்ற பாடங்கள் தேர்வுப் பாடங்கள் என்றால், அறநெறிக்கல்வி வாழ்க்கைப் பாடம். அதனை ஒருநாளும் **புறக்கணிக்கலாகாது**. இளமையில் கற்றுக்கொள்ளும் அறநெறிக்கல்வி, மாணவர்களின் மனத்தில் ஆழப் பதிந்து அவர்களை நல்ல மனிதர்களாக உருவாக்கும் என்பது திண்ணம்.

**வினாக்கள்**

**பின்வரும் வினாக்களுக்கு நான்கு தெரிவுகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை மட்டுமே அடைப்புக்குள் எழுதவும்.**

Q11 கல்வியின் சிறப்பைப் பற்றித் திருக்குறள் என்ன கூறுகிறது? (2 மதிப்பெண்கள்)

1. கல்வியை ஒருவர் கற்க வேண்டியது மிகவும் அவசியம்
2. கல்வி என்பது மாடல்ல, அது ஒருவகை செல்வம்
3. கல்வி மற்ற எல்லாச் செல்வங்களையும் பெற்றுத் தரும்
4. கல்வியைப் பிழையின்றிக் கற்றுக்கொள்ள வேண்டும் ( )

Q12 நேர்முகத் தேர்வில் எத்தகையவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படுகிறது? (2 மதிப்பெண்கள்)

1. படித்திருந்தும் பண்பாக நடந்துகொள்பவர்களுக்கு
2. நிறைய படித்திருப்பவர்களுக்கு
3. கல்வியின் எல்லையை அடைந்தவர்களுக்கு
4. எல்லாம் தெரிந்த ஒருவருக்கு ( )

**பின்வரும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுதவும்.**

Q13 ‘உண்மையாகப் படித்தவர்’ என்று எப்போது ஒருவர் போற்றப்படுகிறார்? (6 மதிப்பெண்கள்)

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

Q14 அறநெறிக்கல்வியின் முக்கியத்துவம் என்ன? (6 மதிப்பெண்கள்)

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

Q15 பின்வரும் சொற்கள் மேற்கண்ட பகுதியில் இடம்பெற்றுள்ளன. அச்சொற்களின் பொருளை எழுதவும். (4 மதிப்பெண்கள்)

அ) பிழையற - ________________________

ஆ) கல்லாதவனாகவே - ________________________

**C4 கருத்தறிதல் 2 (12 மதிப்பெண்கள்)**

**பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுதவும்.**

கையடக்கத் தொலைபேசி வளர்ச்சியடைந்த நாடுகளில் ஓர் இன்றியமையாத இடத்தைப் பெற்றுவிட்டது. இஃது இல்லையெனில் **வாழ்க்கை நகருமா?** என்ற வினாவிற்கு இடமளித்துவிட்டது. உண்மைதான்; இன்று நம்மில் எத்தனை பேரால் கையடக்கத் தொலைபேசி இல்லாமல் இயங்க முடிகிறது? அதை மறந்து வீட்டில் வைத்துவிட்டோம் என்றால், அந்த நாள் முழுவதும் உடலில் ஏதோ குறைபாடு இருப்பதுபோலவே தோன்றும். அந்தளவிற்கு இத்தொலைபேசிகளின் பயன்பாட்டால் நாம் பெரும் பாதிப்படைந்திருக்கிறோம் என்று கூறினால் அது மிகையாகாது.

கையடக்கத் தொலைபேசி முதன்முதலில் பேச்சுவழித் தொடர்பிற்காகவே உருவாக்கப்பட்டது. அதன் அடிப்படைப் பயன்பாடும் அதுதான். காலப்போக்கில் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி கையடக்கத் தொலைபேசியையும் விட்டுவைக்கவில்லை. குறுஞ்செய்தி அனுப்புதல், இணைய வசதி, புகைப்படம் எடுத்தல், காணொளிகளை உருவாக்குதல், விளையாட்டுகள் போன்ற பற்பல வசதிகள் அதில் பொருத்தப்பட்டன. கையடக்கத் தொலைபேசிகளில் இணைய வசதி இருப்பதனால் ஒருவர் இணையத்தளங்களில் வலம் வர முடியும். இரயில் சேவைக்காகவோ, பேருந்து சேவைக்காகவோ காத்திருக்கும் வேளைகளில், தங்கள் பணிகளை நொடிப்பொழுதில் முடித்துவிடலாம்.

**செயலி**களின் உருவாக்கத்தினால் கையடக்கத் தொலைபேசிகளின் சேவைகள் அபாரத்தையும் தாண்டியுள்ளது. வங்கிக் கணக்குகள், உந்துவண்டிகளை முன்பதிவு செய்தல் போன்ற பல அத்தியாவசிய தேவைகளை நாம் அந்தச் சிறு கையடக்கக் கருவியினால் செய்து முடித்துவிட முடியும். இது பன்மடங்கு நேரத்தையும், வீண் அலைச்சலையும் மிச்சப்படுத்துகிறது. புதிதாக ஓர் இடத்தைத் தேடி வரும் ஒருவரிடம் கையடக்கத் தொலைபேசியிருந்தால் போதுமானது. அதில் இருக்கும் போக்குவரத்துச் சேவையின் மூலம் அவரால் தானாகவே அவ்விடத்திற்கு வந்து சேர்ந்துவிட முடியும். நமக்குத் தேவைப்படும் இத்தகைய அன்றாடச் சேவைகளையும் வழங்குவதால் கையடக்கத் தொலைபேசி 'மக்களின் நண்பன்' என்று கூறினாலும் தகும்.

ஒரு நாணயத்திற்கு இருபக்கங்கள் இருப்பதுபோல், கையடக்கத் தொலைபேசிகளினால் தீய பாதிப்புகளும் இருக்கின்றன. பொதுவாகவே, எந்தப் பொருளையும் அளவிற்கு மீறிப் பயன்படுத்தினால் அவை **எதிர்மாறான** விளைவுகளை ஏற்படுத்தும். அதுபோன்று, இக்கருவிகளை அதிகமாகப் பயன்படுத்தும்போது தலைவலி, உடல்நோவு, கண்பார்வை பாதிப்பு போன்ற நோய்கள்

வர வாய்ப்பிருக்கின்றன. நாம் அன்றாடத் தேவைகளுக்கு இதனை நம்பியிருப்பதால் அது இல்லாமல்போகும்போது மனஉளைச்சல் வருவதற்கும் வாய்ப்பிருக்கிறது. எதையும் அளவுடன் பயன்படுத்தப் பழகிக்கொள்ளும்போது அதனால் விளையும் நன்மைகள் மட்டுமே நமக்குக் கிடைக்கும். இதனை உணர்ந்து ஒவ்வொருவரும் கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்துவோம்.

**வினாக்கள்**

Q16 கையடக்கத் தொலைபேசிகளினால் நாம் எவ்வாறு பாதிப்படைந்துள்ளோம்? (3 மதிப்பெண்கள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

WORDSMITH
BEYOND LEARNING

Q17 கையடக்கத் தொலைபேசியில் தற்போது எத்தகைய வசதிகள் இருக்கின்றன? (2 மதிப்பெண்கள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

Q18 கையடக்கத் தொலைபேசி 'மக்களின் நண்பன்' என்று ஏன் கூறப்படுகிறது? (4 மதிப்பெண்கள்)

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

Q19 கையடக்கத் தொலைபேசியினால் ஏற்படும் 'எதிர்மாறான விளைவுகள்' என்று கட்டுரையாசிரியர் எவற்றைக் குறிப்பிடுகிறார்? (3 மதிப்பெண்கள்)

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

**சுருக்கி வரைதல் (8 மதிப்பெண்கள்)**

Q20 கருத்தறிதல் 2-இல் கையடக்கத் தொலைபேசியினால் ஏற்படும் நன்மைகளைப் பற்றிக் கூறப்பட்டுள்ள கருத்துகளைப் பொருள் பிறழாது உன் சொந்த நடையில் 40 சொற்களில் சுருக்கி எழுதவும்.

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

WORDSMITH
BEYOND LEARNING



## வேர்ட்ஸ்மித் சிகரம்

## SECONDARY 2 - HIGHER TAMIL WORKSHEETS (PAPER 2)
## உயர்நிலை 2 - உயர்தமிழ் தேர்வுப் பயிற்சித்தாள் (தாள் 2)

### அருஞ்சொற்பொருள்

| தேர்வுத்தாள் 1 | | | |
|---|---|---|---|
| எண் | அருஞ்சொல் | பொருள் | **English Meaning** |
| 1. | தேவாலயம் (தேவாலயங்கள்) | கிறிஸ்துவர்கள் வழிபடும் இடம் | Church |
| 2. | நூற்றாண்டு | நூறு வருடங்கள் | 100 Years |
| 3. | கிறங்குதல் (கிறங்க) | மயங்குதல் | Faint |
| 4. | தேசம் (தேசங்களில்) | நாடு | Country |
| 5. | மலைத்தல் (மலைக்க) | அதிசயித்தல் | Surprise |
| 6. | அபாரம் (அபாரமான) | மிகச் சிறப்பு | Very great |
| 7. | சிரங்கு | தோலில் ஏற்படும் அரிப்பு | Skin disease |
| 8. | தலையாயது | உயர்ந்தது | Precious |
| 9. | நிகர் (நிகராகும்) | சமம் | Equal |
| 10. | புவியியல் | பூமியைப் பற்றிய படிப்பு | Geography |
| 11. | இயைந்தல் (இயைந்தவை) | சேர்ந்தல் | Together |
| 12. | அகந்தை | தற்பெருமை | Self-praise |
| 13. | எல்லை | வரம்பு | Limit |
| 14. | இயல்பு (இயல்பாக) | சகஜம் | Normal |
| 15. | புறக்கணிக்கலாகாது | அலட்சியப்படுத்தக்கூடாது | Do not ignore |
| 16. | வாழ்க்கை நகருமா? | வாழ்க்கையை நடத்த முடியுமா? | Can you lead your life? |

**வேர்ட்ஸ்மித் சிகரம்**

**SECONDARY 2 - HIGHER TAMIL WORKSHEETS (PAPER 2)**
**உயர்நிலை 2 - உயர்தமிழ் தேர்வுப் பயிற்சித்தாள் (தாள் 2)**

## விடைத்தாள்

### தேர்வுத்தாள் 1

**A1 முன்னுணர்வுக் கருத்தறிதல்**

| | | |
|---|---|---|
| Q1 | ஆகியவை | (2) |
| Q2 | கைவண்ணத்தில் | (6) |
| Q3 | ஒவ்வொன்றுக்கும் | (13) |
| Q4 | திரளாக | (1) |
| Q5 | ஏட்டில் | (14) |

**A2 பிழைத்திருத்தம்**

| | |
|---|---|
| Q6 | மெல்லுவதை |
| Q7 | வெற்றிலையில் |
| Q8 | கோளாறுகள் |
| Q9 | மருந்தாக |
| Q10 | பயன்படுகிறது / பயன்படுத்தப்படுகிறது |

**B3 கருத்தறிதல் 1**

Q11 3

Q12 1

Q13 ஒருவர் படிப்பில் நல்ல தேர்ச்சி பெற்றிருந்து பண்புநலன்களில் சிறப்புற்று விளங்குவார். அவர் தனக்குத் தெரிந்தவற்றை எல்லாம் மற்றவர்களிடம் தற்பெருமை அடிக்கமாட்டார். படிப்பில் குறைந்த தேர்ச்சி பெற்றிருப்பவர்களின் ஆலோசனைகளையும் கேட்பார். உயர்வு தாழ்வு பாராமல் எல்லாரிடமும் இயல்பாகப் பழகுவார். அவர்களின் நிலையில் தங்களை நிறுத்திச் சிந்தித்துப் பார்ப்பார். அவரின் அறிவாற்றலை ஒருபோதும் தற்பெருமையாக நினைக்க மாட்டார். இவ்வாறு 'உண்மையாகப் படித்தவர்' போற்றப்படுகிறார்.

Q14 அறநெறிக்கல்வி மாணவர்களுக்கு வாழ்க்கைப் பாடத்தைக் கற்றுக் கொடுக்கிறது. சிறு வயதிலேயே இப்பாடத்தைக் கற்றுக் கொடுக்கும்போது, அது மாணவர்களின் மனத்தில் ஆழப் பதிந்து எதிர்காலத்தில் அவர்களை விழுமியங்கள் நிறைந்த நல்ல மனிதர்களாக உருவாக்குகிறது. இதுவே, அறநெறிக்கல்வியின் முக்கியத்துவங்களாகும்.

Q15 அ) தவறில்லா

ஆ) படிக்காதவனாகவே

### C4 கருத்தறிதல் 2

Q16 கையடக்கத் தொலைபேசி இல்லாமல் நம்மால் வாழ்க்கையை மகிழ்ச்சியாக வாழ முடியாது என்ற நிலை நிலவிவிட்டது. கையடக்கத் தொலைபேசியைக் கொண்டு செல்ல மறந்துவிட்டால் நமக்கு உடம்பில் ஏதோ குறைபாடு ஏற்பட்டிருப்பதுபோல் தோன்றுகிறது. கையடக்கத் தொலைபேசியினால் இவ்வகையில் நாம் பாதிப்படைந்துள்ளோம்.

Q17 கையடக்கத் தொலைபேசியில் தற்போது குறுஞ்செய்தி அனுப்புதல், இணைய வசதி, புகைப்படம் எடுத்தல், காணொளிகளை உருவாக்குதல், விளையாட்டுகள் போன்ற வசதிகள் இருக்கின்றன.

Q18 கையடக்கத் தொலைபேசியில் தற்போது வங்கிக் கணக்குகளைப் பார்த்தல், உந்துவண்டிகளை முன்பதிவு செய்தல் போன்ற பல சேவைகள் கிடைக்கின்றன. இது நமது நேரத்தையும் அலைச்சலையும் மிச்சப்படுத்துகிறது. மேலும், புதிதாக ஓர் இடத்தைத் தேடி வருபவருக்குக் கையடக்கத் தொலைபேசியில் இருக்கும் போக்குவரத்துச் சேவை செயலி அவருக்கு வழிகாட்டுகிறது. இவ்வாறு நம் அன்றாடத் தேவைகளையும் கையடக்கத் தொலைபேசியின் மூலம் பூர்த்திச் செய்ய முடிவதால் இது ‘மக்களின் நண்பன்’ என்று கூறப்படுகிறது.

Q19 கையடக்கத் தொலைபேசியை அதிக நேரம் பயன்படுத்துவதால் தலைவலி, உடல்நோவு, கண்பார்வை பாதிப்பு போன்ற நோய்கள் வர வாய்ப்பிருக்கின்றன. மேலும், நாம் நம் அன்றாடத் தேவைகளுக்கு இதனை நம்பியிருக்கையில் அஃது இல்லாமல் போகும்போது மன உளைச்சல் வருவதற்கும் வாய்ப்பிருக்கிறது. இவற்றையே கையடக்கத் தொலைபேசியினால் ஏற்படும் எதிர்மாறான விளைவுகள் என்று கட்டுரையாசிரியர் கூறுகிறார்.

Q20 கையடக்கத் தொலைபேசி நம் வாழ்க்கையின் ஓர் அங்கமாகிவிட்டது. அதன் மூலம் நாம் மற்றவர்களுடன் உரையாடுவது மட்டுமன்றி, குறுஞ்செய்தி அனுப்புதல், புகைப்படம் எடுத்தல், காணொளி உருவாக்குதல் போன்ற செயல்களையும் செய்யலாம். மேலும், அதிலிருக்கும் இணைய வசதி உடனுக்குடன் நம் வேலைகளை முடிக்கத் துணைபுரிகிறது. அதிலிருக்கும் செயலிகள் நம் தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்து நேரத்தையும் அலைச்சலையும் மிச்சப்படுத்துகிறது.

## தேர்வுத்தாள் 2

### A1 முன்னுணர்வுக் கருத்தறிதல்

| | | |
|---|---|---|
| Q1 | மறந்துவிட | (3) |
| Q2 | நடத்தப்படுகின்றன | (9) |
| Q3 | வரலாற்றையும் | (12) |
| Q4 | அனுபவமாக | (6) |
| Q5 | சாத்தியமாகாது | (15) |

### A2 பிழைத்திருத்தம்

| | |
|---|---|
| Q6 | உழைப்பிற்கு |
| Q7 | காய்கறிகளை |
| Q8 | விளையாடினார்கள் |
| Q9 | ஆரோக்கியமான |
| Q10 | அதிகளவில் |